**இயல் ஆறு**

*கலை, அழகியல், புதுமை*

# கலை பல வளர்த்தல்




## கற்றல் நோக்கங்கள்

- *தமிழர் சிற்பக் கலையின் வரலாற்றுச் சிறப்பைப் போற்றுதல்*
- *இலக்கியம் காட்டும் ஐவகை நிலங்களின் அழகை நுகர்ந்து அவற்றை விவரித்து எழுதுதல்*
- *சிறுகதை அமைப்பில் தமிழர் இசைக் கலையின் சிறப்பை உணர்தல்*
- *புதியன சிந்தித்துக் கவிதை படைத்தல்*
- *புணர்ச்சி இலக்கண அடிப்படைகளை அறிந்து பயன்படுத்தல்*
- *திருக்குறளின் எளிய வடிவத்தையும் அதன் பொருளையும் அறிந்து சுவைக்கும் திறன் பெறுதல்*



9th_Tamil_Pages 122-264.indd 151 23-01-2020 20:20:57

உரைநடை உலகம்

கலை

௬

# சிற்பக்கலை

KHHJCR

நுழையும்முன்

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன், அவற்றில் சிற்பமென்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். மனித நாகரிக வளர்ச்சியின் தொடக்கமாக இதைக் கொள்ளலாம். உயிரற்ற கல்லிலும் உலோகத்திலும் தமிழர் மன உணர்வுகளையும் நிகழ்வுகளையும் செதுக்கிவைத்த சிற்பங்கள், இன்றும் வரலாற்றின் வாயில்களாக விளங்குகின்றன. தமிழர் அழகியலின் வெளிப்பாடுதான் நாம் காணும் சிற்பங்கள். தமிழ்ச் சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள்.



புலிக்குகை, மகாபலிபுரம்

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.

*"கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்*
*மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்*
*கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன"*

என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன.

## சிற்பங்களின் வகைகள்

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற

இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

### பல்லவர் காலச் சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.



**தெரியுமா?**

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய **தொல்காப்பியத்தில் சிற்பக்கலை** பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை **மணிமேகலை** மூலம் அறிய முடிகிறது.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவிலின் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

### பாண்டியர் காலச் சிற்பங்கள்

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

### சோழர்காலச் சிற்பங்கள்

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர



9th_Tamil_Pages 122-264.indd 153 23-01-2020 20:20:57

சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

### விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள்





**தெரியுமா?**

தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர். சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம். இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.



9th_Tamil_Pages 122-264.indd 154 23-01-2020 20:20:57

எழுப்பப்பட்டன. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது. ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர். வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்களை மண்டபத் தூண்களில் அமைத்தனர். அத்துடன் பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் இவர்கள் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

### நாயக்கர் காலச் சிற்பங்கள்

நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.



மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

### பௌத்த–சமணச் சிற்பங்கள்

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.



9th_Tamil_Pages 122-264.indd 155 23-01-2020 20:20:57





அது போலவே மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

### தனிச்சிறப்புகள்

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. யோகக்கலை, நாட்டியக்கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெற்றுள்ளன.

### இன்றைய சிற்பக்கலை

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களாகக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல! அவை வரலாற்றுப் பதிவுகளாகும்; மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும்; அத்தகு சிறப்புமிக்க சிற்பக் கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## கற்பவை கற்றபின்...

1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.
2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும் அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.



9th_Tamil_Pages 122-264.indd 156 23-01-2020 20:20:58

கவிதைப் பேழை

# கலை

சா

# இராவண காவியம்

– புலவர் குழந்தை

KI6BG2

**நுழையும்முன்**

பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை; அடர்ந்து வளர்ந்த பசுமரங்கள்; நீர் நிறைந்த நதிக்கரைகள்; பச்சை போர்த்திய புல்வெளிகள்; துள்ளித் திரியும் மானினங்கள்; மயில்கள், குயில்கள், கிளிகள் பறந்து திரியும் பறவைகளென இத்தகு அழகிய சூழலைக் கண்டு மனம் மகிழ்ந்ததுண்டா? அழகைச் சுவைத்தால் மனம் புத்துணர்வு பெறும்; எண்ணம் வளமை பெறும். தமிழ் இலக்கியத் திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றில் சில காட்சிகளைக் கண்டு சுவைப்போம் வாருங்கள்.



## குறிஞ்சி

1. *அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி*
*பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்*
*அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை*
*மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால். (49)*

2. *அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்*
*துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்*
*மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்*
*கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே (52)*

**சொல்லும் பொருளும்:** மைவனம் – மலைநெல்; முருகியம்– குறிஞ்சிப்பறை; பூஞ்சினை–பூக்களை உடைய கிளை; சிறை– இறகு; சாந்தம் – சந்தனம்



9th_Tamil_Pages 122-264.indd 157 23-01-2020 20:20:58

## முல்லை

*3. பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்*
*பாஇசை பாடமுப் பழமும் தேனும்தந்*
*தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்*
*ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால் (58)*

*4. முதிரையும் சாமையும் வரகும் மொய்மணிக்*
*குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றுஎனப்*
*பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்*
*அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே! (60)*

சொல்லும் பொருளும்: பூவை– நாகணவாய்ப் பறவை; பொலம்– அழகு; கடறு– காடு; முக்குழல்–கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்; பொலி– தானியக்குவியல்; உழை– ஒரு வகை மான்.

## பாலை

*5. மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ*
*இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்*
*தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற*
*நன்னரில் வலியசெந் நாய்உய ங்குமே. (65)*

*6. கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்*
*படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்*
*வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்*
*அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே (67)*

சொல்லும் பொருளும்: வாய்வெரீஇ– சோர்வால் வாய் குழறுதல்; குருளை– குட்டி; இனைந்து– துன்புறுதல்; உயங்குதல்– வருந்துதல். படிக்குஉற– நிலத்தில் விழ; கோடு– கொம்பு;.

## மருதம்

*7. கல்லிடைப் பிறந்த ஆறும்*
*கரைபொரு குளனும் தோயும்*
*முல்லைஅம் புறவில் தோன்று*
*முருகுகான் யாறு பாயும்*
*நெல்லினைக் கரும்பு காக்கும்*
*நீரினைக் கால்வாய் தேக்கும்*
*மல்லல்அம் செறுவில் காஞ்சி*
*வஞ்சியும் மருதம் பூக்கும்* (72)*

*8. மரைமலர்க் குளத்தில் ஆடும்*
*மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட*
*பொருகரிக் குருத்து அளந்து*
*பொம்மெனக் களிப்பர் ஓர்பால்*
*குரைகழல் சிறுவர் போரில்*
*குலுங்கியே தெங்கின் காயைப்*
*புரைதபப் பறித்துக் காஞ்சிப்*
*புனைநிழல்அருந்து வாரே. (77)*

சொல்லும் பொருளும்: கல்–மலை; முருகு– தேன், மணம், அழகு; மல்லல்– வளம்; செறு– வயல்; கரிக்குருத்து– யானைத்தந்தம்; போர்– வைக்கோற்போர்; புரைதப– குற்றமின்றி.

## நெய்தல்

*9. பசிபட ஒருவன் வாடப்*
*பார்த்துஇனி இருக்கும் கீழ்மை*
*முசிபட ஒழுகும் தூய*
*முறையினை அறிவார் போல*
*வசிபட முதுநீர் புக்கு*
*மலையெனத் துவரை நன்னீர்*
*கசிபட ஒளிமுத் தோடு*
*கரையினில் குவிப்பார் அம்மா (82)*

*10. வருமலை அளவிக் கானல்*
*மணலிடை உலவிக் காற்றில்*
*சுரிகுழல் உலர்த்தும் தும்பி*
*தொடர்மரை முகத்தர் தோற்றம்*
*இருபெரு விசும்பிற் செல்லும்*
*இளமைதீர் மதியம் தன்னைக்*
*கருமுகில் தொடர்ந்து செல்லுங்*
*காட்சி போல்தோன்று மாதோ. (84)*

சொல்லும் பொருளும்: தும்பி– ஒருவகை வண்டு; துவரை–பவளம்; மரை– தாமரை மலர்; விசும்பு– வானம்; மதியம்–நிலவு.



9th_Tamil_Pages 122-264.indd 158 23-01-2020 20:20:58

### பாடலின் பொருள்

1. அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த தமிழிசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்.

2. தீயில் இட்ட சந்தனமரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

3. நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் அழகுமிக்க வண்டுகளும் பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர், முக்கனியும் தேனும் சேகரித்துக் கொண்டு முக்குழல் இசையால் மேயும் பசுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

4. முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஓசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

5. கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி, வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்டு அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

**தெரிந்து தெளிவோம்**

"இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" – பேரறிஞர் அண்ணா

6. சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

7. மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும்; அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருதநில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

8. தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

9. தூய ஒழுக்கமுறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவுக்குப் பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டுவந்து குவிப்பர்.

10. தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்ப் பெண்களின் முகத்தைத் தாமரை மலரெனக் கருதித் தொடர்ந்து செல்லும் அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.



9th_Tamil_Pages 122-264.indd 159 23-01-2020 20:20:58

### இலக்கணக் குறிப்பு

பைங்கிளி– பண்புத்தொகை; பூவையும் குயில்களும், முதிரையும், சாமையும், வரகும்– எண்ணும்மைகள். இன்னிளங்குருளை– பண்புத்தொகை ; அதிர்குரல் – வினைத்தொகை; மன்னிய– பெயரெச்சம்; வெரீஇ– சொல்லிசை அளபெடை; கடிகமழ்– உரிச்சொற்றொடர்; மலர்க்கண்ணி– மூன்றாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன் தொக்க தொகை;

எருத்துக்கோடு– ஆறாம் வேற்றுமைத்தொகை; கரைபொரு– இரண்டாம் வேற்றுமைத் தொகை; மரைமுகம்– உவமைத்தொகை; கருமுகில்– பண்புத்தொகை; வருமலை– வினைத்தொகை;

### பகுபத உறுப்பிலக்கணம்

பருகிய = பருகு+இன்+ ய்+அ;

பருகு – பகுதி;

இன்– இறந்தகால இடைநிலை
(ன் கெட்டது விகாரம்);

ய் –உடம்படுமெய்; அ –பெயரெச்ச விகுதி

பூக்கும் = பூ + க் + க் + உம்;

பூ – பகுதி; க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை;

உம் – வினைமுற்று விகுதி

### தெரிந்து தெளிவோம்

கோர்வை/கோவை : கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.
(எ.கா.) ஆசாரக்கோவை,
ஊசியில் நூலைக் கோத்தான்.

### நூல் வெளி



இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழகக் காண்டத்திலுள்ள பாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு இயற்றப்பட்டது இராவண காவியம்.

## கற்பவை கற்றபின்...

1. ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.
2. இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக/ கவிதை வடிக்க.
3. வைக்கோற் போர், நெற்குதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.

KIF7HP

கவிதைப் பேழை

# கலை ௫

# நாச்சியார் திருமொழி

–ஆண்டாள்

KIP3JC

**நுழையும்முன்**

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. இறையை நாயகனாக எண்ணி நாயகி பாவத்தில் பாடுவதும் காணப்படுகிறது. இப்பாவத்தில் பெண் கவிஞர் ஒருவர் பாடுவது உண்மைக் காதலெனக் கருத வைக்கிறது. ஆண்டாள் பாடியதால் அவர் திருமால் மீது காதல் கொண்டு பாடியதாகக் கொள்கின்றனர். அழகியலுக்கும் பக்திக்கும் இடம் தருகிற ஆண்டாள் கவிதைகள் கற்பவர் மனத்தைக் கவர்கின்றன.



*கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி*
*சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள*
*மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டுஎங்கும்*
*அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.*
(57)

*மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.*
(58)

**சொல்லும் பொருளும்:** தீபம் – விளக்கு; சதிர் – நடனம்; தாமம் – மாலை



9th_Tamil_Pages 122-264.indd 161 23-01-2020 20:20:59

### பாடலின் பொருள்

1. 'ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

2. 'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்துகொள்கிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

#### தெரிந்து தெளிவோம்

பெண்ணின் திருமண வயது 18; ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### இலக்கணக் குறிப்பு

முத்துடைத்தாமம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்

தொட்டு – தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது – விகாரம்

உ – வினையெச்ச விகுதி

கண்டேன் – காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி('கண்' எனக் குறுகியது விகாரம்), ட் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

### நூல் வெளி

திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர். ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 143 பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம்பெற்றுள்ளன.

## கற்பவை கற்றபின்...

1. திருப்பாவையில் இடம்பெற்றுள்ள தொடைநயம் மிக்க பாடல்களுள் எவையேனும் இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ இருந்து திரட்டி வகுப்பறையில் பாடுக.
2. கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் வைத்து பாரதியார் பாடியவற்றுள் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.
3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண் புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.

KIXYKZ



9th_Tamil_Pages 122-264.indd 162 23-01-2020 20:20:59

விரிவானம்

**கலை**

**௬**

# செய்தி

**– தி. ஜானகிராமன்**

KJ7UHH

**நுழையும்முன்**

*இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காக அது எல்லா மொழிகளையும் பேசுவது; மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது; சொற்களைப் புறக்கணித்துத் தனக்குள்ளிருக்கும் செய்தியை எந்தமொழி மனதிற்குள்ளும் செலுத்துவது. ஆரவாரங்கள், குழப்பங்கள், கூச்சல்கள், துயரங்கள் என எல்லாவற்றையும் கடந்த அமைதி வெளியில் மனங்களைக் கூட்டுவது. இசையின் செவ்வியில் தலைப்படும் மனமானது இனம், நாடு என்ற எல்லைக்கோடுகளைத் தாண்டிவிடும். இசை தாண்டவைக்கும்.*

நாகசுர வித்வான் ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து இறங்கி, வக்கீல் வீட்டில் நுழைந்தார். மகன் தங்கவேலுவும், வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு ஒத்துக்காரரும் பின்னால் வந்தார்கள்.

பெரிய ஹால். வாசலிலிருந்தே அவரைக் கையைப் பிடித்து அழைத்துப்போன வக்கீல் உள்ளே குழுமியிருந்த கோஷ்டியை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர்தான் பிலிப் போல்ஸ்கா, இந்தச் சங்கீத கோஷ்டியின் தலைவர்."

"நிறைகுடம்னு சொன்னீங்கள்ள, ஞாபகமிருக்கா?" என்று வக்கீலைப் பார்த்தார்.

"இருக்கு."

"சரியான வார்த்தை! கண்ணைப் பாருங்க. முகம் எவ்வளவு அழகாயிருக்கு, பாத்தீங்களா?"

போல்ஸ்காவுக்குப் பிறகு, கூட வந்திருந்த இருபது இருபத்தைந்து பேருக்கும் வக்கீல், வித்வானை அறிமுகப்படுத்தினார்.

மேலே ஏறி உட்கார்ந்து ஒத்துக்காரன் ஆரம்பித்ததும், ஓலையைச் சரிபண்ணிக்கொண்டார். தங்கவேலு மேடைக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டான்.

நாட்டையைக் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனத்தைத் தொடங்கினார்.

போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. விழி மேலே செருகியிருந்தது. அமிருத தாரையாகப் பெருக்கெடுத்த நாதப் பொழிவில் அவன் தன்னை இழந்துவிட்டான்போல் தோன்றிற்று. நாதம் அவனுடைய ஆத்மாவை, காணாத லோகங்களுக்கும் அனுபவங்களுக்கும் இழுத்துச் சென்றதுபோல் தோன்றிற்று. சளைத்துப்போய் ஆற்றோடு போகிறவனைப்போல், இஷ்டப்படி வெள்ளம் தன்னை அடித்துப் போகும்படி விட்டுவிட்டான் அவன்.

சட்டென்று நாதம் நின்றது. போல்ஸ்காவின் கண் இன்னும் அந்த அநுபவத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. மேலே செருகிய விழிகள் கீழே இறங்கிப் பார்க்க ஒரு நிமிஷம் ஆயிற்று.

டையும் கால்சட்டையுமாகச் சப்பணம் கட்டி அமர்ந்திருந்த அந்தக் கூட்டம் அசையாது பார்த்துக்கொண்டிருந்தது.

"ஐயா, ஒரு சின்னச் சோதனை வைக்கப்போறேன்" என்றார் வித்வான், வக்கீலைப்பார்த்து.

"என்ன!"



9th_Tamil_Pages 122-264.indd 163 23-01-2020 20:20:59

"பாருங்களேன்."

வக்கீல் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தார்.

"தஸரிமா . . . மா" என்று ஆரம்பித்தார்.



சாமா ராகம் என்று அடையாளம் கண்ட வக்கீல், வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். ராகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துகொண்டிருந்தது. நடு நிசியில் தோட்டத்தில் மலர்ந்து மணத்தைப் பெருக்கும் – அமைதியான மணத்தை வீசும் – பவழமல்லியின் நினைவு அவருள்ளத்தில் தோய்ந்தது. அவரது தலை அங்கும் இங்கும் விட்டுவிட்டு வரும் அந்த மணத்திற்கு இசைவாக அசைந்துகொண்டிருந்தது. ராகம் வளர்ந்துகொண்டிருந்தது.

யாரோ கையாட்டுகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தார் வக்கீல். போல்ஸ்காதான். அவன் உடல் ராகத்தோடு இசைந்து அசைந்துகொண்டிருந்தது. இரண்டு கைகளையும் எதையோ வாங்கிக் கொள்வதுபோல் நீட்டிக்கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புன்சிரிப்பு. சன்னதம் வந்தவன்மாதிரி அந்த முகம் நினைவிழந்து எங்கேயோ ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

திடீரென்று உட்கார்ந்திருந்தவன் எழுந்துவிட்டான். கையை நீட்டியபடியே நின்றுகொண்டு, மெல்லிய காற்றில் அசையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். ராகம் இன்னும் வளர்ந்தது.

நின்றுகொண்டிருந்தவன் அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டி ஏந்திக்கொண்டே அடியெடுத்து வைத்தான். நடந்து நடந்து மேடை முன் வந்ததும், மெதுவாக முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டான். கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

வக்கீலும் போல்ஸ்கா கோஷ்டியும் போல்ஸ்காவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். போல்ஸ்கா எந்த உலகத்தில் அலைகிறானோ? எந்த வானில் திரிகிறானோ?

அவன் தவத்தைக் கலைத்துவிடப் போகிறோமே என்று பயந்தாரோ என்னவோ வித்வான்? ராக ஆலாபனத்தைக் கூட ஓர் இடத்தில் நிறுத்தாமல் அப்படியே கீர்த்தனையைத் தொடங்கிவிட்டார்.

"சாந்தமுலேகா..." குழந்தையைக் கொஞ்சுகிறதுபோல அந்த அடி கொஞ்சிற்று. சத்தியத்தைக் கண்டு இறைஞ்சுவதுபோல் கெஞ்சிற்று.

போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது, முதுகு ஒரு சொடுக்குடன் உலுக்கியதில் தெரிந்தது.

கீர்த்தனம் முடிந்தது. வாத்தியம் நின்றது.

மேடையில் கைவைத்து, முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்த போல்ஸ்கா ஓர் எட்டு எட்டி வித்வானின் கையைப் பிடித்தான், கெஞ்சுகிறாற்போல ஒரு பார்வை.

"வேறு ஒன்றையும் வாசிக்காதீர்கள். என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. வேறு வேண்டாம்."

"சாந்தமுலேகாவையே திரும்பி வாசிக்கச் சொல்றார்" என்று நிசப்தத்தைக் கலைக்கத் துணிவில்லாமல் மெதுவாகச் சொன்னார் வக்கீல்.

மீண்டும் அதே நாதம் பொழிந்தது.

ஐந்து, ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கீர்த்தனத்தை வாசித்து முடித்தார். கடைசியில் நாதம் மௌனத்தில் போய் லயித்ததுபோல, இசை நின்றது.



9th_Tamil_Pages 122-264.indd 164 23-01-2020 20:21:02

போல்ஸ்கா அப்படியே தலையை அசைத்துக்கொண்டே இருந்தான். கோயில் மணியின் கார்வையைப்போல அந்த நிசப்தத்தில் அவன் தலையும் உள்ளமும் ஆத்மாவும் அசைந்து ஊசலிட்டுக்கொண்டிருந்தன. மூன்று நிமிஷம் ஆயிற்று.

வக்கீல் ஒரு பெருமூச்சு விட்டார். தொண்டையில் வந்த கரகரப்பை, பயந்து பயந்து கனைத்தார்.

திரும்பிப் பார்த்தான் போல்ஸ்கா.

"மிஸ்டர் மணி, இதில் ஏதோ செய்தி இருக்கிறது. ஏதோ போதம் கேட்கிறது. எனக்கு ஒரு செய்தி; எந்த உலகத்திலிருந்தோ வந்த ஒரு செய்தி கேட்கிறது. அந்தப் போதத்தில்தான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வேகம் அடங்கவில்லை. செய்திதான் அது. எனக்காக அனுப்பிய செய்தி. உலகத்துக்கே ஒரு செய்தி. உங்கள் சங்கீதத்தின் செய்தி அது!"

குழந்தையைப்போல் சிரித்துக்கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினான் போல்ஸ்கா.

"புரிகிறதா?" என்று கேட்டான்.

"புரிகிறாற்போல் இருக்கிறது" என்றார் வக்கீல்.

எனக்கு நன்றாகப் புரிகிறது. அது செய்தி. உலகத்திலேயே எந்தச் சங்கீதமும் இந்தச் செய்தியை எனக்கு அளிக்கவில்லை. இரண்டு கைகளையும் நீட்டி அதை நான் ஏந்தி வாங்கிக்கொண்டுவிட்டேன். ஒருவரும், ஒரு கலையும், ஒரு சங்கீதமும் கொடுக்காத செய்தியை நான் இப்போது பெற்றுக்கொண்டுவிட்டேன்.

"என்னாங்க?" என்று கேட்டார் வித்வான்.

வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார் கேள்வியை.

"என்ன தோன்றிற்று என்று கேட்கிறாரா? உலகம் முழுவதும் பிணக்காடாகக் கிடக்கிறது. ஒரே இரைச்சல், ஒரே கூச்சல், ஒரே அடிதடி: புயல் வீசி மரங்களை முறிக்கிறது. அலை உயர உயர எழுந்து குடிசைகளை முழுக அடிக்கிறது. இடி விழுந்து சாலையின் மரங்கள் பட்டுப்போகின்றன. கட்டிடம் இடிந்து விழுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல் ... இந்தப் போர்க்களத்தில், இந்த இரைச்சலில், நான் மட்டும் அமைதியைக் காண்கிறேன்.

மெதுவாக இந்த இரைச்சல் தேய்ந்து, இந்தப் பிரளயக் கூச்சலும் இரைச்சலும் மெதுவாக அடங்கித் தேய்கிறது. ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இந்த இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நான் எழுந்துவிட்டேன். அரவமே கேட்காத உயரத்திற்கு, மேகங்களுக்கும் புயலுக்கும் அப்பாலுள்ள உயர்விற்கு, எழுந்து,

**தெரிந்து தெளிவோம்** **சிறுகதை – விருது மாலை**

**சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்**

1970 – அன்பளிப்பு (சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி

1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஜானகிராமன்

1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்

1996 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்ரன்

2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி

2010 – சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்

2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

*இதேபோல் மற்றவகை இலக்கியப் படைப்புகளுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்க.*



9th_Tamil_Pages 122-264.indd 165 23-01-2020 20:21:02

### சிறுகதை என்பது...

*சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல; சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில் அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது; ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை, மனநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது; எடுத்து எழுதுவது. சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.*

*சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்துகொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.*

– புதுமைப்பித்தன்

அங்கே அமைதியை, அழியாத அமைதியைக் கண்டுவிட்டேன். இந்த அமைதி எனக்குப் போதும். இப்போதே நான் இந்த அமைதியில் கலந்துவிடத் தயாராயிருக்கிறேன்."

அமைதியுடன்தான் பேசினான் போல்ஸ்கா. வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார்.

வித்வான் திகைத்துப் போனார்.

"அமைதியா, அப்படியா தோணித்து இவருக்கு!"

"ஆமாம்."

"அப்படித்தானே சொல்கிறார் இவர்."

"வார்த்தைகூடச் சொல்லலையே நான். எப்படி இவருக்குத் தெரிஞ்சுது?"

"மிஸ்டர் போல்ஸ்கா, இந்தப் பாட்டும் அமைதி வேணும் என்றுதான் அலறுகிறது. நீங்கள் சொன்ன புயல், இடி என்ற மாதிரியில் சொல்லாவிட்டாலும், அமைதி, அமைதி என்று அமைதியைத்தான் கடைசி லட்சியமாக இந்தப் பாட்டு இறைஞ்சுகிறது."

"அப்படியா!" என்று போல்ஸ்காவும் சமைந்துபோய்விட்டான்.

"செய்திதான் இது. நாதத்துக்குச் சொல்லவா வேண்டும்! எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும்" என்றான் அவன்.



"இந்தக் கையைக் கொடுங்கள். வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரலைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன்" என்று விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக்கொண்டான் போல்ஸ்கா.

(தி. ஜானகிராமனின் செய்தி என்னும் சிறுகதையின் ஒரு பகுதி.)



### தெரியுமா?

தி.ஜானகிராமன் அவர்கள், தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967 இல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோம், செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களைக் கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974இல் நூலாக வெளியிட்டார். தமது காவிரிக்கரை வழியான பயணத்தை நடந்தாய் வாழி காவேரி என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை, அடுத்த வீடு ஐம்பது மைல் என்பதாகும்.



9th_Tamil_Pages 122-264.indd 166 23-01-2020 20:21:04

## நூல் வெளி

தி. ஜானகிராமன் தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும் வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர். வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட இவர்தம் கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன. நாவல்களையும் நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் இவர். தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும்போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே. சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்.

## தெரிந்து தெளிவோம்

இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாகசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது. இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி 13ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது. நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது. எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக்கொண்டு செய்யப்படுகிறது.

## கற்பவை கற்றபின்...

1. *உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை – இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.*

2. *பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.*

KJGQPA



9th_Tamil_Pages 122-264.indd 167 23-01-2020 20:21:04

கற்கண்டு

# கலை

சூ

# புணர்ச்சி

KJQLQX

## நிலைமொழி – வருமொழி

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு; மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்..

## புணர்மொழியின் இயல்பு

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| கலை + அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர்முதல் |
| வாழை + மரம் | மெய்ம்முதல் |

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண்+இ) + அடி = மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை |

## இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப் படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

வாழை + மரம்= வாழைமரம்

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை

புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை:



9th_Tamil_Pages 122-264.indd 168 23-01-2020 20:21:04

தோன்றல், திரிதல் கெடுதல்.

நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)

கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)

பல் + பசை = பற்பசை (திரிதல்)

புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

### உயிரீற்றுப் புணர்ச்சி

#### உடம்படுமெய்

உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.

நிலைமொழியின் ஈற்றில் 'இ,ஈ,ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து

> இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
> உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
> (நன்.162)

புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்

#### குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.

குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரங்களுக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.

உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு






9th_Tamil_Pages 122-264.indd 169 23-01-2020 20:21:05

## தெரிந்து தெளிவோம்

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு, அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |

### மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை 'வலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.
   எ.கா. மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம்
   மெய்+ஞானம்=மெய்ஞ்ஞானம்
   செய்+நன்றி=செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய,ர,ழ முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. வேய்+குழல்=வேய்ங்குழல்
   கூர்+சிறை=கூர்ஞ்சிறை
   பாழ்+கிணறு=பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.
   எ.கா. புளி+கறி=புளிங்கறி
   புளி+சோறு=புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. மா+பழம்=மாம்பழம்
   விள+காய்=விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.
   எ.கா. பூ+கொடி=பூங்கொடி
   பூ+சோலை=பூஞ்சோலை
   பூ+தொட்டி=பூந்தொட்டி

## கற்பவை கற்றபின்...

**1. எழுத்துவகை அறிந்து பொருத்துக.**

1. இயல் – அ. உயிர் முதல் உயிரீறு
2. புதிது – ஆ. உயிர் முதல் மெய்யீறு
3. ஆணி – இ. மெய்ம்முதல் மெய்யீறு
4. வரம் – ஈ. மெய்ம்முதல் உயிரீறு

KJZHSK



9th_Tamil_Pages 122-264.indd 170 23-01-2020 20:21:05

2. புணர்ச்சிகளை 'முதல், ஈற்றுச்' சொல்வகையால் பொருத்துக.

1. செல்வி + ஆடினாள் – அ. மெய்யீறு + மெய்ம்முதல்

2. பாலை + திணை – ஆ. மெய்யீறு + உயிர்முதல்

3. கோல் + ஆட்டம் – இ. உயிரீறு + உயிர்முதல்

4. மண் + சரிந்தது – ஈ. உயிரீறு + மெய்ம்முதல்

3. சேர்த்து எழுதுக.

அ) தமிழ் + பேசு ஆ) தமிழ் + பேச்சு இ) கை + கள் ஈ) பூ + கள்

4. பொருத்தமான உடம்படுமெய்யுடன் இணைக்க.

அ) பூ + இனம் ஆ) இசை + இனிக்கிறது இ) திரு + அருட்பா ஈ) சே + அடி

**சிந்தனை கிளர் வினாக்கள்**

அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.

ஆ) 'புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும்' – இக்கூற்றை ஆராய்க.

இ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில்' அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை'யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

ஈ) படக்காட்சியிலிருந்து இருசொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.



எ.கா. மரக்கிளை – விகாரப் புணர்ச்சி, மூன்று பெண்கள் – இயல்பு புணர்ச்சி



9th_Tamil_Pages 122-264.indd 171 23-01-2020 20:21:06

# மதிப்பீடு

KK9DU8

### பலவுள் தெரிக.

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ___________

   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி _______

   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

3. மரவேர் என்பது ________ புணர்ச்சி

   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

4. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' -யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

   ஆ)தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

   ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

5) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ________ .

   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

   இ) தெய்வ உருவங்கள் ஈ)நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

### குறுவினா

1. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
2. நடுகல் என்றால் என்ன?
3. இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
4. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
5. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.
6. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

### சிறுவினா

1. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?
2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

3. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

4. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

5. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

6. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

### நெடுவினா

1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

2. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

3. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க.

| வான் தந்த பாடம் | The Lesson the Sky Teaches |
|---|---|
| எத்தனை பெரிய வானம்!<br>எண்ணிப்பார் உனையும் நீயே;<br>இத்தரை, கொய்யாப் பிஞ்சு,<br>நீ அதில் சிற்றெறும்பே,<br>அத்தனை பேரும் மெய்யாய்<br>அப்படித் தானே மானே?<br>பித்தேறி மேல்கீழ் என்று<br>மக்கள்தாம் பேசல் என்னே!<br>– பாவேந்தர் பாரதிதாசன் | *How Vast is the sky!*<br>*Think you of yourself;*<br>*The earth is a tiny*<br>*Guava fruit; you. like all*<br>*Others are a tiny ant*<br>*In it? is that not so?*<br>*Why talk madly of*<br>*The high and the low?*<br>*Pavendar Bharathidasan*<br>*(translated by P. Parameswaran)* |

### மொழிபெயர்க்க.

1. *Strengthen the body*
2. *Love your Food*
3. *Thinking is great*
4. *Walk like a bull*
5. *Union is Strength*
6. *Practice what you have learnt*

*(– Putiya Athichoti by Bharathiyar)*

### மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத் தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன். (எ.கா.) முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.



9th_Tamil_Pages 122-264.indd 173 23-01-2020 20:21:06

**பத்தியில் இடம்பெற்றுள்ள இயல்பு புணர்ச்சிகளையும் விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்தெழுதுக.**

காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதேபோன்று காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவிலிலும் பல்லவர்காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவுவாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பதுபோன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

1. இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
2. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.
3. நேற்று தென்றல் காற்று அடித்தது.
4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.
5. அணில் பழம் சாப்பிட்டது.
6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

(எ.கா.) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

**கவிதை படைக்க.**


மூடநம்பிக்கை, புவியைப் போற்று, அன்பின்வழி

(எ.கா.) **மூடநம்பிக்கை**

*பூனை குறுக்கே போனதற்குக்*
*கவலைப்படுகிறாயே!*
*அந்தப் பூனைக்கு என்ன ஆனதோ?*

## மொழியோடு விளையாடு

**விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.**



**கண்டுபிடிக்க.**

1. எண்ணும் எழுத்தும் கண் – இந்தத் தொடரை ஒருவர் 1 2 3 4 1 5 6 7 4 8 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றிக் கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்?

   அ) எழுது    ஆ) கண்ணும்    இ) கழுத்து    ஈ) கத்து

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் – இக்கூற்று

   அ) உண்மை    ஆ) பொய்    இ) உறுதியாகக் கூறமுடியாது

**அகராதியில் காண்க.**

ஏங்கல், கிடுகு, தாமம், பான்மை, பொறி

**உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.**

1. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
3. தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

## செயல் திட்டம்

உங்கள் மாவட்டத்தின் கலைநயம் மிக்க இடங்களின் சிறப்புகளைப் படங்களுடன் திரட்டிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

**நிற்க அதற்குத் தக**

என்னை மகிழச்செய்த பணிகள்

(எ.கா.)

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்பறையில் கரும்பலகையின்கீழ் சிதறிக்கிடந்த சுண்ணக்கட்டித் துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைத்தட்டல் பெற்றேன்.
3. ____________________________________________________________.

**கலைச்சொல் அறிவோம்**

குடைவரைக் கோவில் – *Cave temple*
கருவூலம் – *Treasury*
மதிப்புறு முனைவர் – *Honorary Doctorate*
மெல்லிசை – *Melody*
ஆவணக் குறும்படம் – *Document short film*
புணர்ச்சி – *Combination*

**அறிவை விரிவுசெய்**

நட்புக்காலம் – கவிஞர் அறிவுமதி
திருக்குறள் கதைகள் – கிருபானந்தவாரியார்
கையா, உலகே ஒரு உயிர் – ஜேம்ஸ் லவ்லாக்
– தமிழில்: சா. சுரேஷ்



9th_Tamil_Pages 122-264.indd 175    23-01-2020 20:21:07


## இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/d051/d0512.pdf
http://www.tamilvu.org/courses/degree/a011/a0114/html/A0114331.htm
http://www.tamilsurangam.in/literatures/divya_prabandham/naachiyaar_thirumozhi.html#.WqolcuhuZPY
https://sites.google.com/site/rsrshares/home/03-thi-janakiraman-stories-and-novels

## இணையச் செயல்பாடுகள்

### தமிழ்நாடு இ–சேவை

எளிதாய் விண்ணப்பிக்கலாமே இனி!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, தமிழ்நாடு இ–சேவை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் ஆதார் சேவை, பான் கார்டு, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, காவல்துறை புகார் தொடர்பான செய்திகள் அறிதல், திருமணச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு அரசு சார்ந்த இ–சேவைக்கான தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதை அறிக.
- உதாரணத்திற்கு பான் கார்டு என்பதில் பான் பதிவு NSDL என்பதைத் தெரிவு செய்து online PAN application என்பதில் உங்கள் சுய விவரங்களைப் பூர்த்தி செய்து இ–சேவையில் விண்ணப்பிக்க.





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.tn.android.eservice



9th_Tamil_Pages 122-264.indd 176 23-01-2020 20:21:09

வாழ்வியல் இலக்கியம்

கலை

சூ

# திருக்குறள்

–திருவள்ளுவர்

KH4S9G



### புல்லறிவாண்மை (85)

1) *ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
*போஒம் அளவுமோர் நோய்.*

*சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல்*
*இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!*

2) *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*
*கண்டானாம் தான்கண்ட வாறு.*

*அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான்!*
*அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்!*

### இகல் (86)

3) *இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
*துன்பத்துள் துன்பங் கெடின்.*

*துன்பத்தில் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால்,*
*இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம் .*



9th_Tamil_Pages 122-264.indd 177 23-01-2020 20:21:09

### குடிமை (96)

4) *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.**

கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும்,
ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை.

### சான்றாண்மை (99)

5) *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)*
*ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் சமத்துவ எண்ணமும்
இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்!

**அணி – ஏகதேச உருவக அணி**

6) *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை.*

செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே
சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.

7) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)*
*ஆழி எனப்படு வார்.*

ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக்
கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார் !

**அணி – ஏகதேச உருவக அணி**

### நாணுடைமை (102)

8) *பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
*அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்.

### உழவு (104)

9) *சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.**

பல தொழில்களால் இயங்கினாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும்! அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

10) *உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து.*

மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.

**அணி – ஏகதேச உருவக அணி**



9th_Tamil_Pages 122-264.indd 178 23-01-2020 20:21:10

## கற்பவை கற்றபின்...

KHDNB4

1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க



அ. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

இ. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

| | |
|---|---|
| பகைவரையும் நட்பாக்கும் கருவி | கண்டானாம் தான்கண்ட வாறு |
| தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான் | அறம்நாணத் தக்கது உடைத்து |
| அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும் | மாற்றாரை மாற்றும் படை |

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| ஒ | ப் | பு | று |
| க | ப | ர | வ |
| ட | டை | வு | த |
| ல் | உ | ழ | வ |
| ம் | ற | அ | ர் |

அ. அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் ……………

ஆ. உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ……

இ. தான் நாணான் ஆயின் …… நாணத் தக்கது.

ஈ. ஆழி என்பதன் பொருள் ……

உ. மாற்றாரை மாற்றும் ………

ஊ. ஒழுக்கமான குடியில் பிறந்தவர் …… செய்வதில்லை.

5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக்கதை ஒன்றை எழுதுக.



9th_Tamil_Pages 122-264.indd 179 23-01-2020 20:21:10

**வினாக்கள்**

1) *இறக்கும்வரை உள்ள நோய் எது?*

2) *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)*

*ஐந்துசால்பு ஊன்றிய தூண்.*

*இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.*

3) *உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?*


4) *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*

*கண்டானாம் தான்கண்ட வாறு.*

*இக்குறட்பாவில் பயின்றுவரும் தொடைநயத்தை எழுதுக.*


## இணையச் செயல்பாடுகள்

திருக்குறள் – விளையாடிப் பார்ப்போமே!




படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தித் திருக்குறள் விளையாட்டு என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் அறிவுரையைத் தொடர்ந்து **விளையாடு** என்பதைத் தெரிவு செய்தவுடன் மாணவர், ஆசிரியர், பேராசிரியர் என்பதில் ஒன்றைத் தெரிவு செய்க.
- இப்போது மிதக்கும் சீர்களைச் சரியான இடத்தில் பொருத்தி முழுமையான குறளைக் கண்டறிக. அக்குறளுக்கான விளக்கத்தை அதைத் தொடர்ந்து பார்க்க.



படி–1



படி–2



படி–3

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.nilatech.thirukkuralvilaiyaattu



9th_Tamil_Pages 122-264.indd 180 23-01-2020 20:21:10